தலைப்பு 205 - பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் - 2025

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

தலைப்பு 205 – பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (திருத்திய) 11(1) பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2026 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2026 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள ்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும்

பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள், கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் நிதி அல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதியை 2026 மார்ச் மாத கணக்குச் பொழிப்பின் ஆரம்ப மீதியாக பதிவு செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி, நிதி அல்லாச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்காக அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (அ) | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்த 2 வாகனங்கள், கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் நிதி அல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 1.6.1 (அ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்கும் ஒரு மூலதனச் செலவின விடயத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 7,500,000 கொண்ட மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | அவ்வருடத்தில் மூலதன அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால், ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட காரணமாக அமைந்தது. | செலவு மதிப்பீடுகள் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 11 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு மற்றும் 2 மூலதனச் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 46,650,000 இல் ரூபா 13,432,598 சேமிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு சேமிக்கப்பட்ட தொகையானது நிகர ஒதுக்கீட்டின் 23 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது. | ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்கிய கொடுப்பனவுகளை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்தல், எதிர்பார்த்த வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படாமை, மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை, பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியற்பாடு சேமிக்கப்பட்டமை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துவதற்கான செலவுகள் எதிர்பார்த்த மட்டத்திற்கு எழாமை, வாகனப் பழுதுபார்ப்பு மற்றும் பொருத்துதல்கள் எதிர்பார்த்த மட்டத்திற்கு மேற்கொள்ளப்படாமை மற்றும் சேவைத் தேவைகளுக்கு ஏற்ப மிகவும் அத்தியாவசியமான பயிற்சித் திட்டங்களுக்கு மாத்திரம் உத்தியோகத்தர்களை | செலவு மதிப்பீடுகள் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழிப்படுத்தியமை ஆகிய காரணங்களினால் இந்நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பி கணக்கில் செப்தெம்பர் மாதத்திற்குரிய கடன் நிலுவை அறவீடானது வேறொரு தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டதன் காரணமாக, வருட இறுதி மீதியில் திணைக்களப் புத்தகங்களுக்கும் திறைசேரிக் கணினி அச்சுப்பிரதிக்கும் இடையே ரூபா 25,124 கொண்ட வேறுபாடு காணப்பட்டது. | தற்போது இத்தவறைத் சீர்திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | திணைக்களப் புத்தகங்களுக்கும் திறைசேரிப் புத்தகங்களுக்கும் இடையிலான வேறுபாடு தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | CIGAS இணையப் பயன்பாட்டின் மூலம் உருவாக்கப்படும் நிதி அல்லாச் சொத்துக்கள் கணக்கு அறிக்கையில் (SA 82), மீளாய்வாண்டினுள் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுகளின் மொத்தம் ரூபா 8,556,677 ஆக இருக்க வேண்டும் என்றபோதிலும், அது ரூபா 8,523,677 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 33,000 கொண்ட வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த ரூபா 33,000 பெறுமதியானது அதே SA 82 கூற்றின் கீழ் போக்குவரத்து உபகரணங்களின் கொள்வனவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி, திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி அல்லாச் சொத்துக்கள் அறிக்கை துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (திருத்திய) பிரவு 38 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இந்தச் உறுதிப்படுத்தலை | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்தம் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களில் தயாரிக்கப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், மேலும், கணக்காய்வு செய்யும நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்க சமர்பிப்பதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அந்தத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூ. | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இன் உப பிரிவுகள் 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3 | 137,500 | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய, 3 வருடங்கள் கடந்த கடன் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிக்கவில்லை | 2026 மார்ச் மாத கணக்குச் சுருக்கத்தின் மூலம் கடன் நிலுவையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாபனக் விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் ஏற்பாடுகளுக்கு இணங்க, கடனை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| | • 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின்<br><br>3.1 ஆம் பந்தி | | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கு பின்னரும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பிரதான பழுதுபார்ப்பிற்குப் பின்னர் ஆகிய விடயங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் ஒரு எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை என்பதுடன், எரிபொருள் பயன்பாட்டின் மாற்றங்களை இனங்காண்பதற்காகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்த போக்குவரத்துச் சேவைப் பதிவேட்டைப் | வாகனங்கள் தொடர்பான எரிபொருள் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எரிபொருள் பயன்பாட்டின் மாற்றங்களை இனங்காண்பதற்காக, சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்த போக்குவரத்துப் பதிவேட்டை முறையாகத் தயாரித்து வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| • 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | ஒவ்வொரு வருடத்திற்குரிய அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மாதாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், எதிர்வரும் வருடத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது நடப்பு வருடத்தின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | ஆரம்பத்தில் முதல் 04 மாதங்களுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், 2025 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதற்கேற்ப பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயலாற்றுகைச் சுட்டிகளையும் உள்ளடக்கி மீண்டும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| • 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | வருடாந்த பெறுகை திட்டமானது நடைமுறை ஆண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதற்காக பிரதான க்கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2025 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பெறுகை திட்டமானது சுற்றறிக்கைக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | பெறுகைத் திட்டத்திற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், 2026 ஆம் ஆண்டிற்கான விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் உப பிரிவு 47(4) இற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம் இந்த செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் உப பிரிவு 47(4) இற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025 ஒக்தோபர் 15 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரைறைக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்றுக்கு 2007 சனவரி 27 ஆம் திகதியன்று ஏற்பட்ட விபத்துத் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 254,038 நட்டத்தை, சம்பந்தப்பட்ட சாரதியிடமிருந்து அறவிடப்படுவதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கினைத் பின்னூட்டல் நடவடிக்கைக்கு உட்படுத்தாமையின் காரணமாக, காலாவதியுற்றதன் அடிப்படையில் அது தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன், விபத்து இடம்பெற்று 18 வருடங்கள் கடந்தபோதிலும் அதற்குரிய இழப்பினைப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தைத் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நி.பி 109 இன் பிரகாரம் விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | நிதி பிரமாணம் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

## 4.3 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 1,144 நம்பிக்கை பொறுப்புக்களும், 176 மரண சொத்துக்களும் நிர்வாகம் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் நிர்வாகம் செய்யப்படும் அனைத்துப் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்ட திகதி, அதற்குரிய சொத்துக்கள் மற்றும் மரண சொத்துக்களின் பெறுமதி போன்ற விபரங்கள் அடங்கிய ஆவணமொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பு மற்றும் மரண சொத்துக்கள் அடங்கிய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை நாளதுவைரயாக்கப்பட்டு பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் அனைத்து நம்பிக்கை பொறுப்பு மற்றும் மரண சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவுனரால் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் நிறைவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், அவ்வாறு நிறைவு செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் எவையென்பன மற்றும் செயலற்ற நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் தொடர்பாக 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகையில் திணைக்களத்தினால் நிர்வாகம் செய்யப்படுகின்ற நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களில், செயலற்ற நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் நிறுவுனரால் நிறைவு செய்யப்பட்டு மூடப்பட்டுள்ள நம்பிக்கை பொறுப்புக்கள் பற்றிய நாளதுவரையாக்கப்பட்ட விபரங்களை திணைக்களம் பேணியிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் தொடர்பான பதிவேடுகளை சரியான முறையில் நாளதுவரையாக்கப்பட்டு பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | செயலற்ற மற்றும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தினால் நிர்வாகம் செய்யப்படும் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தினால் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய 4 சதவீதமான மூலதனக் கட்டணம், வருமானக் கட்டணம் மற்றும் அசையாச் சொத்துக்கள் மூலம் கிடைக்கப்பெறும் | நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய வருமானக் கட்டணங்களைச் சரியான முறையில் அறவிடுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களுக்குரிய அசையாச் சொத்துக்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் வருமானக் கட்டணங்களை உரிய காலப்பகுதியில் அறவிட்டு, |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திலிருந்து செலுத்தப்பட வேண்டிய 7 சதவீதமான அரசாங்கக் கட்டணம் ஆகியன சரியான முறையில் அறவிடப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும், நிர்வாகம் செய்யப்படும் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களின் எண்ணிக்கை பற்றிய சரியான விபரங்கள் காணப்படாமை காரணமாக, வருமானக் கட்டணங்கள் முறையாகச் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் போயுள்ளது. | | அரசாங்கத்திற்குரிய கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகையில் பொது நம்பிக்கை பொறுப்புக்காப்பாளர் திணைக்களத்தின் கீழ் நிர்வாகம் செய்யப்படும் 1,317 நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களில், 401 நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்கள் சார்பாக ரூ. 311 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஒரு நம்பிக்கை பொறுப்பு அல்லது மரண சொத்துக்குரிய செலவானது அந்தப் நம்பிக்கை பொறுப்பு அல்லது மரண சொத்தின் நிதியிலிருந்தே ஏற்கப்பட வேண்டும் என்ற போதிலும், திணைக்களத்தினால் நிதி காணப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களிலிருந்தே அனைத்துச் செலவுகளும் ஏற்கப்பட்டிருந்தன. இத்தகை சூழ்நிலை காரணமாக, ரூ. 311 மில்லியன் செலவானது எந்தப் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களின் நிதியைப் பயன்படுத்திச் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தைக் கண்டறிய முடியாமல் போயுள்ளது. | எதிர்மறை பண மீதிகள் பதிவாகியுள்ள நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களைக் கண்டறிந்து, அந்தப் நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் மரண சொத்துக்களின் வருமானத்தை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் மற்றும் ஏனைய மாற்று வழிகளின் ஊடாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது. | குறித்த நம்பிக்கை பொறுப்பு மரண மற்றும் சொத்தின் நிதியிலிருந்து அந்தப் நம்பிக்கை பொறுப்பு மற்றும் மரண சொத்தின் செலவுகள் மாத்திரமே ஏற்கப்பட வேண்டும். |
| (உ) | சீ. ஈ. வனிகசூரிய மரண சொத்துக்குரிய சொத்துக்களை விற்பனை செய்து, சொத்துரிமையாளரின் பெயரில் பொறுப்பொன்றை நிறுவுவதற்காகப் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு 2005 ஆம் ஆண்டில் நிர்வாக அதிகாரங்கள் கிடைத்திருந்த போதிலும், சில காணித்துண்டுகள் மற்றும் அதிலுள்ள கட்டடங்களின் உரிமையைக் கண்டறிந்து, பொது நம்பிக்கை பொறுப்பாளரின் | காணித்துண்டுகளைக் கண்டறிவதற்காகத் தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள துடன், அக்குழுவினால் அக்காணிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பொது நம்பிக்கை பொறுப்பாளருக்குரிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்து, நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும், குறித்த சொத்துக்களை விற்பனை செய்து சொத்துரிமையாளரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | சார்ந்தோருக்குச் செலுத்துவதற்காக 2025 திசெம்பர் 31 உள்ளவாறு வெளிநாட்டு இழப்பீடாக 272 சார்ந்தோருக்கு ரூ. 254,261,880 செலுத்தப்பட வேண்டியிருந்தது. இத்தொகையினுள் 1991 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட ரூ. 1,187,997 மற்றும் 5 வருடங்களுக்கு முன்னர் இருந்து நிலுவையாகவுள்ள 98 சார்ந்தோருக்குரிய ரூ. 29,125,201 ஆகிய பெறுமதிகள் உள்ளடங்கியிருந்த போதிலும், குறித்த இழப்பீட்டுப் பணத்தை அதற்குரிய இழப்பீட்டுப் பயனாளர்களைக் கண்டறிந்து செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட விபரங்களைப் பேணுவதற்கான கணினிப் பொறிமுறையொன்றும் நிறுவப்பட்டிருக்கவில்லை.<br><br>வெளிநாட்டு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்குரிய 05 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையான மீதிகளுக்காகச் சார்ந்தோரின் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய முறையான ஆவணமொன்றோ மற்றும் 18 வயதுக்குட்பட்ட சார்ந்தோரின் இழப்பீட்டுப் பணம் குறித்த ஆவணமொன்றோ பேணப்பட்டிருக்கவில்லை. | இதுவரை உரிமை கோரப்படாத கொடுப்பனவுகள் தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இழப்பீடுகள் சம்பந்தப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டு வருகின்றது. | இழப்பீட்டுப் பணம் கிடைக்கப்பெற்றவுடன் செலுத்தி முடிக்கப்பட வேண்டும். |
| (எ) | 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகவுள்ள 280 விகாரைகளுக்கு விகாரை இழப்பீடாகச் செலுத்தப்பட வேண்டிய ரூ. 39,641,651 பெறுமதியான தொகை காணப்பட்டதுடன், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகையிலும் குறித்த விகாரைகளுக்கு அந்தப் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் காணப்படுகின்ற விஹாரை இழப்பீடுகள் தொடர்பாக விகாரைகளுக்குத் தெளிவுபடுத்துவதற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | இழப்பீட்டுப் பணம் குறித்த விகாரைகளுக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 1968 ஆகஸ்ட் 11 ஆம் திகதி சிங்கப்பூரில் மரணித்த திருமதி புளோரன்ஸ் ஈனிட் விதாம் என்பவருக்கு இலங்கையிலிருந்த அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்து கிடைக்கப்பெறும் பணத்தை உரிமைகோருநருக்கு/ பயனாளிகளுக்கு வழங்குவதற்காக, அதிகாரமளிக்கப்பட்ட முகவராக பொது நம்பிக்கை பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற ரூ. 64,645,776 தொகையை உரிமைகோருநருக்கு/ பயனாளிகளுக்கு வழங்கியமை தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 30 உரிமைகோருநர்கள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 16 பேரும் சமூகமளிக்கவில்லை. இப்பயனாளிகளில் பெரும்பான்மையானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையினால், பயனாளிகளைக் கண்டறிய முடியாமல் போனதன் காரணமாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்து வருகின்றன. | சொத்துக்களை விற்பனை செய்து கிடைக்கப்பெற்ற பணம் பயனாளிகளுக்குச் செலுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களக் கட்டளைச்சட்டத்தின் 47 (1) ஆம் பிரிவிற்கமைய, பொது நம்பிக்கை பொறுப்பாளரின் கணக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு தீர்மானிக்கப்படும் முறையில் நியமிக்கப்பட்ட நபரொருவரால் குறைந்தபட்சம் வருடாந்தம் ஒரு தடவையேனும் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு செய்யப்படடிருக்கவில்லை. | பொதுப் நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்திற்கமைய, கணக்காய்விற்கான பொதுப் நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் முன்மொழிவுகள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்திற்கமைய, நம்பிக்கை பொறுப்புக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | எச்.ஏ. த சில்வா நம்பிக்கை பொறுப்புக்குரிய ஹொரண தோப் வத்த காணியானது மாக இன்ஜினியர்ஸ் (தனியார்) கம்பனிக்கு 2021 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2025 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன், 2025 ஆகஸ்ட் 31 ஆம் திகதியுடன் அக்குத்தகை உடன்படிக்கை நிறைவடைந்துள்ளது. எனினும், 2025 செப்தெம்பர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதி வரை முந்தைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த வாடகையை அடிப்படையாகக் கொண்டு அறவீடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், ஒரு முறையான குத்தகை உடன்படிக்கை உடன்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் மிக விரைவில் புதிய உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டு, அக்குத்தகை உடன்படிக்கையின் பிரதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காணிகளைக் குத்தகைக்கு விடும்போது சட்டபூர்வமான உடன்படிக்கையொன்றின் கீழ் குத்தகைக்கு விடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | என்.டி.எஸ். சில்வா மரண சொத்துக்குரிய களுத்துறை பலாதொட்டவில் அமைந்துள்ள தொல்பொருள் பெறுமதிவாய்ந்த ரிச்மண்ட் காசல் மாளிகையானது உரிய காலத்தில் புனரமைக்கப்படாமை காரணமாக, கூரையிலிருந்து நீர் கசிந்து சுவர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளமையினால் அதன் கீழ் மாடி மாத்திரமே சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் இம்மாளிகையைப் பார்வையிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து 2025 ஆம் ஆண்டில் ரூ. 9,754,725 நுழைவுச்சீட்டு வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மாளிகையைப் புனரமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் வேலை பெறுகை நடவடிக்கைகள் மத்திய கலாசார நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | ரிச்மண்ட் காசல் மாளிகையை மிகவிரைவில் புனரமைத்து, சொத்துரிமையாளரின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

(ஔ) ஹரி ஹபுகொட மரண சொத்து

| | | | |
|---|---|---|---|
| (i) | ஹரி ஹபுகொட மரண சொத்தின் சுதுவெலிபொத்த வத்தையைக் குத்தகைக்கு விடுவதற்காகக் காணித் துண்டுகளைத் தீர்மானிக்கும்போது, எந்தவித வருமானமும் கிடைக்கப் பெறாத 48 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட வயல் நிலங்களைக் குத்தகைக்கு விடுவது குறித்துக் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 113 ஏக்கர்களில் 61 ஏக்கர் 33 பேர்ச்ஸ் பரப்பளவைக் கொண்ட நிலப்பகுதி மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதிலுள்ள செழிப்பான பயிர்களைக் கொண்ட நிலப்பகுதிகளும் குத்தகைக்கு விடுவதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்தன. | புதிய பயிர்ச்செய்கையொன்றை ஆரம்பிப்பதற்குத் தடைகள் காணப்படுவதாகவும், ஓரளவிற்குப் பிணக்குகளற்ற தெளிவான நிலையிலுள்ள காணிப் பரப்பளவைக் குத்தகைக்கு விட்டு, ஒரு குறிப்பிட்ட வருமான மார்க்கத்தை ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கைவிடப்பட்டுள்ள வயல் நிலக் காணித்துண்டுகளைக் குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (II) | லாவலுகஹதுாவ மற்றும் யகல்கந்த ஆகிய காணித்துண்டுகள் சுமார் 24 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகக் காணப்படுவதுடன், எல்லைத் தூண்களை அடையாளப்படுத்தி, திணைக்களத்தின் பெயரைப் | பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்கு தோட்ட அதிகாரிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | காணிகளின் எல்லைகளை அடையாளப்படுத்தி, திணைக்களத்தின் பெயர்ப்பலகைகளை நாட்டி, காணிகளைப் பாதுகாப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | காட்சிப்படுத்தி அக்காணிகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (III) | மரண சொத்துக்குரிய பங்களா அமைந்துள்ள காணித்துண்டு 04 ஏக்கர் 01 ரூட் 08 பேர்ச்ஸ் பரப்பளவைக் கொண்டதாகக் காணப்பட்ட போதிலும், நிலஅளவை நடவடிக்கைகள் செய்யப்படாமையினால் குறித்த முழுமையான காணிப் பரப்பளவையும் திணைக்களம் அநுபவித்து வருகின்றதா என்பதைக் கண்டறிய முடியாமல் போயுள்ளதுடன், ஹரி ஹபுகொட சொத்துரிமையாளர் வாழ்ந்த வீடும் இக்காணியிலேயே அமைந்துள்ளது. தற்போதைய தோட்ட அதிகாரி தனது உத்தியோகபூர்வ கடமைகளுக்காகவும் வசிப்பிடத்திற்காகவும் இவ்வீட்டைப் பயன்படுத்தி வருவதுடன், இவ்வீடு மிகவும் பாழடைந்த நிலையில் காணப்பட்ட போதிலும், அதனைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கிலுள்ள பற்று மீதி காரணமாகப் புனரமைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளன. | கட்டடங்களை உரிய காலத்தில் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | ஹரி ஹபுகொட மரண சொத்துக்குரிய 17 ஏக்கர் 02 ரூட் 1.5 பேர்ச்ஸ் பரப்பளவைக் கொண்ட மத்தக வத்தையைக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உடன்பட்டமை குறித்து 2025 திசெம்பர் 16 ஆம் திகதியன்று குத்தகைதாரருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபாய் 5,560,000 ஆரம்ப வைப்பினைப் பெற்றுக்கொண்டமையைத் தவிர, குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையைப் பதிவுசெய்வதற்காக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடன்படிக்கையொன்றில் உடன்படுதல் வேண்டும். |
| (க) | திரு. தொன் சைமன் விஜேவிக்ரம என்பவரால் 1950 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட மரணசாசனத்தின் மூலம் டி.எஸ்.டப்ளியூ. சமரகோன் புண்ணியப் நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் நோக்கங்களான பிலியந்தலை நகரத்தில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள வைத்தியசாலையில் வார்ட்டொன்றை நிர்மாணிப்பதற்கும், அதனை அவரது காலஞ்சென்ற தாயாரின் பெயரில் | பிலியந்தலை வைத்தியசாலையின் காயக்கட்டுப் பிரிவை நவீனமயமாக்குதல் மற்றும் அதற்குரிய வரைபடங்கள் மற்றும் அளவுப்பட்டியல்களை தயாரித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ள துடன், அதற்குரிய நிதியேற்பாடு திணைக்களத்தினால் | சொத்துரிமையாளரின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெயரிடுவதற்கும் பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதுவரையிலும்கூட அவ்வைத்தியசாலையில் வார்ட்டை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், அடிப்படை நோக்கத்திற்குப் புறம்பாக ஏனைய பொருட்கள் (மருத்துவமற்ற உபகரணங்கள்) மாத்திரமே நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. | வழங்கப்படும் என்பது குறித்து 2024 இலும் 2025 இலும் கடிதங்கள் மூலம் மேலதிக வினவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 77 ஆகக் காணப்பட்ட போதிலும், உள்ளவாரான பதவியணி 66 ஆகக் காணப்பட்டமையினால் 11 பதவிகள் வெற்றிடமாக நிலவின. | தற்போது கணக்காளர் பதவிக்காகப் பதில் கடமைக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், சட்ட உத்தியோகத்தர் ஒருவரைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சிடம் எழுத்துமூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்படல் வேண்டும். |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி, ஒரே சேவைக்காலத்தில் 5 வருடங்கள் சேவையாற்றியுள்ள உத்தியோகத்தர் ஒருவரை வேறொரு சேவை இடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான இடமாற்றக் கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், திணைக்களத்திற்குள் 5 வருடங்களைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றங்களுக்காக 2025 யூலை மாதத்தில் விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டபோது, 2025 யூன் 30 ஆம் இல் உள்ளவாறு திணைக்களத்தில் 05 வருடங்களுக்கும் மேலாகச் சேவையாற்றியுள்ள 14 உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்கள் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை பிரகாரம் இடமாற்றங்கள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். |